## நன்றியுரை

**கோட்டார் மறைமாவட்ட புனிதர்கள் வழிபாடும் வழக்காறுகளும்' (தோமா, சவேரியார், அந்தோணியார்** என்னும் இவ்வாய்வேடு நல்லமுறையில் நிறைவு பெறுவதற்கு அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு என் இதயப்பூர்வமான நன்றியை முதற்கண் சமர்ப்பிக்கிறேன்.

ஆய்வினை மேற்கொள்வதற்கு வாய்ப்பளித்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மற்றும் குழுவினருக்கு என் உளம் நிறைந்த நன்றியை உரித்தாக்கிறேன். ஆய்விற்கு அனுமதி அளித்த இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிர்வாகக் குழுவினர்களுக்கும் மற்றும் கல்லூரி முதல்வர் **முனைவர். ர.டேவிட் ராஜா போஸ்** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நெறியாளராக இருந்து ஆய்விற்கு வேண்டிய அறிவுரைகள் கூறி கால நேரம் பாராது நான் கேட்கும் ஐயப்பாடுகளுக்கு இன்முகத்தோடு விடையளித்து என்னை ஊக்கப்படுத்தி வழிகாட்டிய உதவிப் பேராசிரியர் முனைவர்.த.மகிலா ஜெனி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்விற்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நூலகம், நாகர்கோவில் மாவட்ட மைய நூலகம், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி நூலகத்திற்கும் உளம் கனிந்த நன்றி. விவிலியம் சார்ந்த பல தகவல்களைத் தந்துதவிய புதிய வண்ணான் விளை சபைப் போதகர் அருள்திரு.ஆர்.டேவிட் ஜெபசிங் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

களஆய்வு மேற்கொள்ள உதவிய தகவலாளிகள் மற்றும் கோயில் நிர்வாகத்தினர், குருக்கள், உபதேசியார் ஆகியோர்களுக்கும் நூல்கள் மற்றும் இதழ்கள் தந்துதவிய குருக்கள் மற்றும் கோயில் நிர்வாகத்தினர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

களஆய்வின் போது என்னை வழி நடத்தின என் பெரியப்பா. மு.க.சதீஷ், எனது சித்தப்பா உ.முத்துராஜ் மற்றும் என் சகோதரர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வேட்டை சிறந்த முறையில் கணினி முறையில் தட்டச்சு செய்து தந்த உரிமையாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(வீ.ச.சஜலா)**

ஆய்வாளர்